பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

23 02 2026 MONDAY 7 15 PM

ஆகாஷவாணி - <u>செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெறும் ராஜாஜி உற்சவம், நாட்டிற்கு அவர் அளித்த பங்களிப்பை போற்றும் வகையில் அமைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. மருத்துவத் துறையில் இந்தியாவை முன்னணி நாடாக உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. ஜெ. பி. நட்டா கூறியுள்ளார்.
3. நாட்டின் வளர்ச்சிக்கு அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கியதே காரணம் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.
4. ஈரானில் பதற்றமான சூழலை கருத்தில் கொண்டு, இந்தியர்கள் அந்நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று இந்திய தூதரகம் கேட்டுக் கொண்டுள்ளது.
5. துபாய் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - ஜீவன் நெடுஞ்செழியன் இணை பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>><<<<<>>>>>><<<<

நாட்டிற்கு ராஜாஜி அளித்த பங்களிப்பை போற்றும் வகையில், குடியரசுத்தலைவர் மாளிகையில், அவர் பெயரிலான உற்சவம் நடைபெறுவது பாராட்டுக்குரியது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், காலனித்துவ எண்ணங்களுக்கு எதிராக குரல் கொடுத்தவர் ராஜாஜி என்றும், அவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மிகச் சிறந்த அறிஞராகவும், சிந்தனையாளராகவும், சுதந்திரப் போராட்ட தியாகியாகவும் திகழந்தவர் ராஜாஜி என்று பிரதமர் புகழாரம் சூட்டியுள்ளார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெறும் ராஜாஜி குறித்த தகவல்களை அறிந்து கொள்ளும் வகையிலான கண்காட்சியை, மக்கள் அனைவரும் பார்வையிட வேண்டும் என்றும் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>><<<<<>>>>>><<<<

மருத்துவ சிகிச்சையில் உலக அளவில் முன்னுரிமை பெற்ற நாடாக இந்தியாவை உருவாக்குவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டிருப்பதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக பேசிய அவர், நாடுகளுக்கு இடையேயான உறவுகளையும், மக்களுக்கு இடையேயான உறவுகளையும் வலுப்படுத்தவும், ஒத்துழைப்பை மேம்படுத்தவும், மருத்துவ சுற்றுலா ஒரு வாய்ப்பாக விளங்குகிறது என்று கூறினார்.

இருதய நோய், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை, நரம்பியல் போன்ற சிறப்பு மருத்துவத் துறைகளில் தகுதிவாய்ந்த மருத்துவர்கள் இந்தியாவில் உள்ளதாகவும், அதன் காரணமாகவே பல்வேறு நாடுகளையும் சேர்ந்தவர்கள் இங்கு வருவதாகவும் திரு ஜெ பி நட்டா தெரிவித்தார்.

>>>><<<<<<>>>>><<<<

நாட்டின் வளர்ச்சிக்கு அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கியதே காரணம் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் தேசிய தரநிர்ணய மாநாட்டில் காணொலி வாயிலாக பங்கேற்றுப் பேசிய அவர், குறைபாடுகள் இல்லாத எல்லோருக்கும் சமவாய்ப்புகளை அளிக்கக்கூடிய வகையில், மத்திய அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறினார்.

இதன் மூலம், நீடித்த, தரத்தை உறுதி செய்யக்கூடிய, அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சி உறுதி செய்யப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

உலக அளவிலான தரத்துடனும், கட்டமைப்பு மேம்பாட்டுடனும், சோதனை மூலமும், தரமான வகையில் தொழிற்சாலைகள், உற்பத்திப் பொருட்களை வழங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் திரு. பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

>>>><<<<<<>>>>><<<<

நிலக்கரி அடிப்படையிலான அனைத்து தொழிற்சாலைகளையும் தில்லி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளுக்கு வெளியே கொண்டு செல்வது குறித்து மத்திய அரசு பதிலளிக்குமாறு உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

தலைமை நீதிபதி திரு சூரியகாந்த், நீதிபதிகள் திரு Joymalaya Bagchi, திரு Vipul Pancholi அடங்கிய அமர்வு, தில்லியில் காற்றின் தரத்தை மேம்படுத்துவதை உறுதி செய்வதற்கு ஏதுவாக, இந்த உத்தரவை வெளியிட்டது.

வாகன புகை மாசுபாடு தொடர்பாக, காற்று தர மேலாண்மை ஆணையத்தின் ஆலோசனைகள் குறித்து அடுத்த மாதம் 12-ஆம் தேதி பரிசீலனை செய்ய இருப்பதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

அதற்கு முன்னதாக, பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு, எரிசக்தி, சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் ஆகியன தங்களின் பதில் மனுக்களை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் நீதிபதிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

>>>><<<<<>>>>><<<<

விவசாயிகள் நலன் தொடங்கி, இளையோருக்கு அதிகாரம் அளிப்பது வரை அனைத்துத் துறைகளிலும் மத்திய அரசு தொடர்ந்து தீவிரமாக பணியாற்றி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, மேற்குவங்க மாநில மக்களுக்கு பிரதமர் எழுதியுள்ள கடிதத்தில், திரிணாமுல் காங்கிரஸ் ஆட்சியில் அம்மாநிலம் பல்வேறு துறைகளிலும் ஊழல் மற்றும் வன்முறை காரணமாக வளர்ச்சியில் பின்தங்கியிருப்பதாக கூறியுள்ளார்.

கடந்த 11 ஆண்டுகளில் மத்திய அரசு அனைத்து மாநிலங்களுக்கும் எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றியிருப்பதாக அதில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்குவங்க மாநில மக்கள் எதிர்கால தலைமுறையினரின் நலனை கருத்தில் கொண்டு, சரியான முடிவெடுக்க வேண்டிய தருணம் ஏற்பட்டிருப்பதாகவும் திரு நரேந்திர மோடி அக்கடிதத்தில் கூறியுள்ளார்.

>>>><<<<<>>>>><<<<

இரட்டை வரி விதிப்பை தவிர்க்கும் வகையிலான நடைமுறையில் திருத்தம் மேற்கொள்வதற்கான ஒப்பந்தத்தில் இந்தியாவும், பிரான்சும் கையெழுத்திட்டுள்ளன.

இதுதொடர்பாக, புதுதில்லியில் நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அண்மையில் பிரான்ஸ் அதிபர் திரு இமானுவெல் மெக்ரான், இந்தியா வந்திருந்தபோது இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் தலைவர் திரு ரவி அகர்வால், இந்தியாவுக்கான பிரான்ஸ் தூதர் Thierry Mathou ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதாக அதில் கூறப்பட்டுள்ளது.

>>>><<<<<>>>>><<<<

புதுதில்லியில் இந்தியா செயற்கை நுண்ணறிவு தாக்கம் குறித்த உச்சிமாநாட்டு அரங்கில், காங்கிரஸ் கட்சியினர் நடந்துகொண்ட விதம் கண்டிக்கத்தக்கது என்று பிஜேபி தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் திரு சுதான்ஷு திரிவேதி, காங்கிரஸ் கட்சியினரின் இத்தகைய செயல்பாடுகளால், அக்கட்சி மீது நாட்டு மக்கள் கோபம் அடைந்திருப்பதாக கூறினார்.

இந்திய இளைஞர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் வகையிலான உச்சிமாநாட்டில் காங்கிரஸ் கட்சியினரின் செயல் துரதிருஷ்டவசமானது என்று கூறிய அவர், எதிர்க்கட்சி கூட்டணியின் தலைவர்களே இந்த செயலை கண்டித்திருப்பதை சுட்டிக்காட்டினார்.

சர்வதேச அளவில் நடைபெறும் இதுபோன்ற நிகழ்வுகளில் நாட்டின் கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் திரு சுதான்ஷு திரிவேதி வலியுறுத்தினார்.

>>>><<<<<>>>>><<<<

*சர்வதேச போதைப்பொருள் கடத்தல் கும்பலை சேர்ந்த ஐந்து பேரை தில்லி காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.*

*அவர்களிடமிருந்து சுமார் 9 கோடி ரூபாய் மதிப்பிலான 18 லட்சம் போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டதாக காவல்துறை உதவி ஆணையர் திரு விக்ரம் சிங் தெரிவித்துள்ளார்.*

*இந்த போதை மாத்திரைகள் Mundra துறைமுகம் வழியாக இங்கிலாந்துக்கு கடத்தப்பட இருந்ததாகவும், காவல்துறையினருடன் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில் அவை பறிமுதல் செய்யப்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.*

*>>>><<<<<<>>>>><<<<*

*ஈரானில் எழுந்துள்ள பதற்றமான சூழலை கருத்தில்கொண்டு, அங்கு வசிக்கும் இந்தியர்கள், வெளியேற வேண்டும் என்று இந்திய தூதரகம் கேட்டுக்கொண்டுள்ளது.*

*டெஹ்ரானில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வர்த்தக விமானங்கள் போன்ற போக்குவரத்து வசதிகளை பயன்படுத்தி, எச்சரிக்கையுடன் வெளியேறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.*

*போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் பகுதிகளுக்கு செல்வதை தவிர்ப்பதுடன், தேவைப்பட்டால், ஈரானில் உள்ள இந்திய தூதரகத்தின் அறிவுறுத்தலை பெறலாம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*பாஸ்போர்ட் மற்றும் அடையாள அட்டைகள் உள்ளிட்ட பயண ஆவணங்களை இந்தியர்கள் தங்களுடன் வைத்திருக்குமாறும், உதவி தேவைப்படுவோர் தூதரக தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றும் அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*>>>><<<<<<>>>>><<<<*

*உலகின் பல்வேறு நாடுகளிலும், முன்னெப்போதும் இல்லாத அளவில் மனித உரிமைகள் மீறப்பட்டு வருவதாக ஐ.நா பொதுச்செயலாளர் திரு. அன்டோனியோ குட்டரஸ் தெரிவித்துள்ளார்.*

*ஜெனீவா-வில் நடைபெற்று வரும் மனித உரிமை கவுன்சில் கூட்டத்தை தொடங்கி வைத்துப் பேசிய அவர், சர்வதேச சட்ட விதிமுறைகள் பரவலாக மீறப்பட்டு வருவதாகவும், சூடான், யுக்ரைன் போன்ற நாடுகளில் நடைபெற்று வரும் போரினால், பொதுமக்கள் அதிக அளவில் பாதிக்கப்படுவதாகவும் கூறினார்.*

*சர்வதேச மனித உரிமைகள் குறித்த சட்டத்தை அனைத்து நாடுகளும் உரிய முறையில் பின்பற்ற வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.*

*மனித உரிமை கவுன்சிலிலிருந்து அமெரிக்கா வெளியேறியிருப்பது, சர்வதேச அளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக அவர் கூறினார்.*

*மனித உரிமைகளை பாதுகாக்க ஒரு சில நாடுகள் தவறுவது வேதனை அளிக்கக்கூடியதாக உள்ளது என்றும் திரு. அன்டோனியோ குட்டரஸ் தெரிவித்தார்.*

*>>>><<<<<>>>>><<<<*

*பங்களாதேஷ் முன்னாள் தலைமை ஆலோசகர் திரு முகமத் யூனுஸ், அரசியல் சட்ட நடைமுறைகளை பின்பற்றாமல் புறக்கணித்து வருவதாக அந்நாட்டு அதிபர் திரு முகமது சஹாபுதீன் குறை கூறியுள்ளார்.*

*நாளிதழ் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், உரிய முறையில் ஆலோசனை நடத்தாமல், பல்வேறு சட்டங்களை திரு யூனுஸ் வெளியிடுவதாக தெரிவித்தார்.*

*மேலும், வெளிநாட்டு பயணத்தை நிறைவு செய்தபின், அது குறித்த தகவல்களை திரு யூனுஸ் தெரிவிக்கவில்லை என்றும் திரு சஹாபுதீன் குற்றம் சாட்டினார்.*

*>>>><<<<<>>>>><<<<*

*துபாய் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - ஜீவன் நெடுஞ்செழியன் இணை பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளது.*

*ஆடவர் இரட்டையர் பிரிவு தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-4, 7-6 என்ற செட்கணக்கில் போலந்தின் Karol Drzewiecki - Piotr Matuszewski இணையை வென்றது.*

*>>>><<<<<>>>>><<<<*

*டென்னிஸ் போட்டிகளுக்கான தேசிய தரவரிசை பட்டியலில், இந்தியாவின் Vaishnavi Adker இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்*

*>>>><<<<<<>>>>><<<<*

*சிங்கப்பூர் Smash டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manush Shah - Diya Chitale இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை 11-8, 11-4, 11-5 என்ற செட்கணக்கில் சிங்கப்பூரின் Pang Koen - Zang Jian இணையை வென்றது.*

***>>>><<<<<<END>>>>><<<<***